[1971 டிசம்பர் 15

Tobacco Research Sub-Unit for Hosur Taluk

* 430. *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a Central Tobacco Research Sub-Unit has been recommended for Hosur taluk; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) ஓசூர் பகுதி நில தட்ப வெப்பநிலைகள் மற்ற புகையிலை சாகுபடி செய்யும் இடங்களிலிருந்து மாறுபடுகிறது. இந்த பகுதி நிலத்திற்கேற்ற புகையிலை ரகத்தை தேர்ந்தெடுக்கவும், பயிரிடப்படும் குணப்படுத்தப்பட்ட வர்ஜீனியா புகையிலையின் தரத்தையும் அதிக ரிக்க ஒரு சோதனை நிலையம் ஆரம்பிக்குமாறு புகையிலை அபிவி ருத்தி இயக்குநர் ஐ.சி.எ.ஆர். நிறுவனத்தை கேட்டுக் கொண்டுள் ளார்.

வேளாண்மையில் பட்டம் பெற்ற பெண்கள்

*** 431 வினா—பி. எஸ். மணியன்:** மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது விவசாயக் கல்லூரியில் படித் துப் பட்டம் பெற்ற பெண்கள் எவரேனும் உள்ளாரா?

(இ) ஆம் எனில், அவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) 16.

திரு. பி. எஸ். மணியன்: தலைவரவர்களே, எல்லாத் துறைகளி லும் பட்டம் பெற்ற பெண்கள் ஏராளமாக இருக்கும்போது. விவசாயப் பட்டம் பெற்ற பெண்கள் மட்டும் 16 பேர் இருக்கி றார்கள் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இது சமத் துவத்திற்கு விரோதமாக இருக்கிற காரணத்தால் அதிகமான பெண்கள் விவசாயப் பட்டம் பெறுவதற்கு அரசு வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பெண்கள் பட்டம் பெறுவது என்பது வேறு. விவசாயப் பட்டம் பெற்றவர்கள் வேலைக்கு மாத்திரம் செல்ல வேண்டுமென்பது அல்ல நோக்கம். அவர்கள் மற்ற பல துறைகளிலும் ஈடுபட வேண்டியிருப்பதால், பெண்கள் இதற்கு அதிகமாக வருவதில்லை. ஆகவே, இதற்கு இந்த அளவு வைக்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த விவசாய பட்டம் பெற்ற 16 பெண்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டுள்ளதா? அப்படி பட்டம் பெற்ற பெண்களுக்கு வேலை வாய்ப்புக்கு என்ன வழி செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அந்த 16 பெண்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.